## சாப்ரூ-மாளவியா பேதம்

### புதிய அரசியல் திட்டம்

காசி, பிப்ரவரி, 19—

நேற்று மாலை கூட்டுக்கமிட்டி அறிக்கையைப்பற்றி ஆலோசனை செய்ய இந்து சர்வகலாசாலை பார்லிமென்டின் விசேஷ கூட்டமொன்று நடந்தது. இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் நல்லெண்ணம் அதிகரிக்க வேண்டுமென்று சர். தேஜ் பகதூர் சாப்ரூ பலமான வேண்டுகோள் விடுத்தார்.

சர். சாப்ரூ கூறியதாவது:—“நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கூட்டு கமிட்டி அறிக்கை நமது கைக்கு வந்து விட்டது. இத்தகைய சந்தர்ப்பங்களில் புதிய அரசியல் திட்டம் அனுஷ்டானத்திற்கு யுக்தமாகுமாறு நாம் முயற்சி செய்ய வேண்டுவது நமது கடமையாகும். உண்மையில் ஏற்றுக்கொள்ளத்தகாத விஷயங்கள் அந்த திட்டத்தில் இருக்கலாம். அவ்விஷயங்கள் சம்பந்தமாக நாம் சர்க்காருடன் மாறுபடவே வேண்டும். ஆனால் இரு தேசங்களுக்குள் விரோதம் ஏற்படாதவாறு நாம் வேலை செய்யவேண்டும். நாம் நமக்குள் சமரச முடிவொன்றுக்கு வந்து நமது திட்டத்தை சர்க்கார் முன்பு சமர்ப்பிக்க வேண்டும்.”

பண்டித மாளவியா முழக்கம்

பண்டித மதன் மோகன மாளவியா கூறியதாவது.—“சில விஷயங்கள் சம்பந்தமாக சர். தேஜ்பகதூர் சாப்ரூ கூறுவதை நான் ஒத்துக்கொள்கின்றேன். ஆனால் பல விஷயங்கள் சம்பந்தமாக மாறுபட்ட கருத்துடையவன் நான். கூட்டு கமிட்டி திட்டத்தின் ஒவ்வொரு விதியும் இந்தியர்மீது அவநம்பிக்கையை குறிப்பிடுவதாக விருக்கிறது. அவ்விஷயமானது இந்தியாது சுயமதிப்பை பங்கப்படுத்துவதாகும். அரசியல் திட்ட நிராகரிப்பானது அத் திட்டத்தை வீசியெறிவதென்பதாகாது. அப்படிச் செய்ய நமக்கு சக்தி இல்லை. ஆனால் அத்திட்டத்தை தேசத்தின் மனச்சாட்சி யெதிர்க்கிறது. நாம் மனப்பூர்வமாக அத் திட்டத்தை யெதிர்த்தே தீரவேண்டும்.”

---

### 8 வயது இளவரசர் வீரம்

புதுடில்லி, பிப்ரவரி, 16—

நேற்று வீரபுரி காட்டில் வேட்டைக்குரிய மச்சு வீட்டிலிருந்து இளவரசர் யஸ்வந்த சிங் 9 அடி நீளமுள்ள பெண் புலி யொன்றைச் சுட்டதாக டாடியாவிலிருந்து தகவல் கிடைத்துள்ளது. அந்த இளவரசருக்கு வயது 8. டாட்டியா மகாராஜாவின் புதல்வர். அந்த இளவரசர் 7 வயதில் முதலாக ஒரு புலியைச் சுட்டார்.

---

### ஜில்லா காங்கிரஸ் ரத்து

மத்திய மண்டல தீர்மானம்

நாகபுரி, பிப்ரவரி, 20—

மத்திய மண்டல மாகாண காங்கிரஸ் கமிட்டி கூட்டம் டாக்டர் என். பி. கேரின் தலைமையில் நடைபெற்றது. காங்கிரஸ் புதிய அமைப்பு திட்டம் ஆலோசனைக்கு வந்தது. ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளை ரத்து செய்து விடுவதென்றும், இம்மாகாண அ. இ. கா. கமிட்டி மெம்பர்களை 7 லிருந்து 3 க்கு குறைப்பதென்றும், மாகாண காங்கிரஸ் கமிட்டி எண்ணிக்கையை 70 லிருந்து 17 க்குக் குறைப்ப தென்றும் தீர்மானித்தனர்.

**ஸ்ரீ. அபயங்கர் ஞாபகார்த்தம்**

காலஞ்சென்ற ஸ்ரீ. எம். வி. அபயங்கரின் ஞாபகார்த்த சின்னத்தை ஏற்படுத்த சேத் யமுனலால் பஜாஜ் உள்ளிட்டு 8 பேர்களடங்கிய கமிட்டியை நியமித்தார்கள்.

---

# சென்னை சர்க்கார் : : வரவு செலவு

## 1935-36ம் வருஷ திட்டம்

## 4·85 லக்ஷம் ரூபாய் மிச்சமேற்படும்

### வரி வஜாவால் 2 கோடிக்கு மேல் நஷ்டமாம்!

| | 1933-34 (லக்ஷம்) | 1934-35 (லக்ஷம்) | 1935-36 (லக்ஷம்) |
|---|---|---|---|
| வரவு | 1603·06 | 1602·57 | 16,49·09 |
| செலவு | 1596·81 | 1621·61 | 16,44·24 |
| மிச்சம் | 6.25 | —19·04 (அதிகச் செலவு) | 4·85 |

சென்னை, பிப்ரவரி, 20—

சென்னை சர்க்காரின் 1935-36ம் வருஷ வரவு செலவு திட்டத்தை இன்று நிதி மந்திரி சர். எச். ஜி. ஸ்டோக்ஸ் சென்னை சட்டசபையில் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறியதாவது:—

நான் இச் சபையில் 1934-35ம் வருஷத்திய திருத்தப்பட்ட வரவு செலவு கணக்குகளையும், 1935-36ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்தையும் சமர்ப்பிக்கும் கௌரவத்தைப் பெற்றிருப்பது இது ஐந்தாவது முறையும், கடைசிமுறையுமாகும். முந்திய வருஷங்களைப் போல் 1934-35ல் இம்மாகாணத்தில் தகராறை விளைவிக்கக்கூடிய கிளர்ச்சிகள் எதுவுமில்லை. முந்தி ஏற்பட்ட கிளர்ச்சிகளால் இந்தியாவிலுள்ள பல பாகங்களின் பொருளாதார, நிதி நிலைமைக்கு மிகுந்த பாதகமேற்பட்டது. ஆனால் ஒத்துழையாமையையும், சட்டமறுப்பையும் கைக்கொண்டு வந்தவர்கள் தங்கள் தவறை உணர்ந்தது திருப்திகரமான ஓர் விஷயமாகும். ஆனால் விவசாய, பொருளாதார நிலைமை சம்பந்தப்பட்ட வரையில், பிரஸ்தாப வருஷமானது அதிக ஆறுதலை யளிக்கக்கூடியதாக இல்லை.

வருமானம் குறைந்த காரணம்

அடுத்தபடியாக 1934-35ம் வருஷத்திய திருத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். இவ் வருஷம் ரூ. 1643·63 லட்சம் வருமானம் கிடைக்குமென மதிப்பிட்டோம். ஆனால், எதிர் பார்த்த வருமானத்தில் ரூ. 41·06 லக்ஷம் குறைந்து விட்டதால், அவ்வருஷ வருமானம் ரூ. 1602·57 லக்ஷமேயாகும். செலவில் ரூ. 17·50 லக்ஷமே குறையுமென எதிர் பார்ப்பதால், இவ்வருஷத்தில் அதிகச் செலவு ரூ. 19·04 லக்ஷமாகும். வருமானத்தில் ரூ. 11·06 லக்ஷம் குறைந்ததே அதற்கு காரணம். உற்ற காலத்தில் மழை பெய்யாமல் பயிர்கள் பாழானதால், நிலவரி வருமானம் எதிர் பார்த்தபடி கிடைக்கவில்லை. வருமானம் குறைந்ததற்கு அதுபோன்ற விஷயங்களே காரணமாகும். இன்னும் எவ்வளவு தூரம் விட்டுக்கொடுக்கவேண்டி யிருக்குமென்பதுபற்றி ரெவினியூ போர்டின் பூரா சிபார்சுகளும் கிடைக்கவில்லை.

1935-36-ம் வருஷ திட்டம்

1935-36-ம் வருஷத்தில் ரூபாய் 1648.80 வருஷ வருமானம் கிடைக்கும். ரூ. 1611·04 லக்ஷம் செலவேற்படு மென்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இவ்வருஷம் காலநிலை திருப்திகரமாக இருந்து நிலவரி வசூலில் சிறிதும் அபிவிருத்தி ஏற்படலா மெனினும், சித்தூர், அனந்தபூர், பெல்லாரி முதலிய ஜில்லாக்களில் 1935-ம் வருஷம் ஏப்ரல் மாதத்திற்கு ஒத்திவைத்துள்ள கிஸ்திகளை வசூல் செய்ய முடியுமா வென்பது சந்தேகம்தான். இவ் வருஷம் சில முக்கியமான திட்டங்களையொட்டிய ரூ. 33·71 லக்ஷம் ரூபாய் செலவை ஒப்புக்கொள்ளும்படி சிபார்சு செய்ய நிதி கமிட்டியார் தீர்மானித்திருக்கிறார்கள். ஷை செலவு வருஷா வருஷம் ஏற்படக்கூடியதாகும். இன்னும் இறுதியாக 67·91 லக்ஷம் ரூபாயும், வருஷா வருஷம் 4·97 லக்ஷம் ரூபாயும் செலவாகும் திட்டங்களையும் ஒப்புக் கொள்ளும்படி நிதி கமிட்டியார் சிபார்சு செய்வார்கள்.

கடன் வாங்கப் போவதில்லை

1935-36ல் சென்னை சர்க்கார் இந்திய சர்க்காரிடமிருந்து கடன் வாங்க உத்தேசிக்கவில்லை.

நிலவரி வஜா

நிலவரி வஜா பிரச்னை சம்பந்தமாகவும், சர்க்கார் தங்கள் வருமானத்தில் ரூ. 371 லட்சம் விட்டுக் கொடுக்க வேண்டுமென்று இச்சபை நிறைவேற்றிய தீர்மானம் சம்பந்தமாகவும் நான் அதிகமாக பேச வேண்டுவதில்லை. இது சம்பந்தமாக சர்க்கார் சமீபத்தில் அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளனர். பொருளாதாரத்தையும், அது சம்பந்தமான முழு திட்டத்தையும் சீர்குலைக்க வல்லதும், பல அபிவிருத்தி வேலைகளுக்கும் பண வசதி இல்லாதபடி செய்ய வல்லதுமான ஒரு பிரேரணையை சர்க்கார் ஏற்றுக்கொள்வது சாத்தியமல்ல வென்று கூறினாலே போதும். அந்த தீர்மானம் ஒரே பசலியையே குறிப்பிடுவதாகும். அவ்வளவு பெரும் தொகையை 12 மாதங்களில் விட்டுக் கொடுப்பது சாத்தியமென்று யாராகிலும் உத்தேசிப்பாரேயானால் அவரை சாதாரண ஆசாமி யென்றே கூறவேண்டும். இப்பிரச்னை சம்பந்தமாக கடந்த சில வாரங்களாக ஏற்பட்டுள்ள கோஷம், நான் ஏமாறுதபடி செய்வதற்குப் போதுமானதாகும்.

1342 முதல் 1345 வரையில் நான்கு பசலிகளுக்கு மொத்தவரி வஜா 2 கோடி 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாகிறது.

நமக்குள்ள குறை யென்ன வென்றால், நமது வருமானங்கள் தாராளமாக கிடைபபதாக விருக்காததேயாகும். நமது வருமானத்தில் முக்கால் பங்கு நிலவரியாலும், கலால் வரியாலுமே கிடைக்கிறது. வருமானத்திற்கு புதிய வருவாய்கள் காணுவதை நீண்டகாலம் ஒத்திவைக்க முடியாது. நமது வருமானங்கள் அதிகரிக்காமலிருப்பதுபற்றி நான் கலக்க மடையவில்லை. சிறுகச் சிறுகத்தான் வருமானம் அதிகரிக்கும். கடந்த மூன்று வருஷத்தில் விலை இறங்கியதை ஒத்திட்டுப் பார்க்கும்போது, விலை வாசிகள் திடீரென உயருமென்று எதிர் பார்ப்பதற்கே இல்லை.

புதிய அரசியல் திட்டத்தின் கீழ் மாகாண நிர்வாகத்தை மேற்கொள்வோருக்கு சாதகமான நிலைமை ஏற்படவேண்டுமென்ற முக்கிய நோக்கத்துடனேயே சர்க்கார், பொருளாதாரம் சம்பந்தமாக நடந்து வந்துள்ளனர். புதிய அரசியலுக்குப் பாதகம் ஏற்படுமாறு, கொள்கையை அநுசரிப்பதைவிட விபரீதமானது எதுவுமே இல்லை.

முடிவாக நான் இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளும்படி சபையினரைக் கேட்டுக் கொள்கின்றேன். கடந்த வருஷத்தில் நிதி கமிட்டியும் சர்க்கார் கணக்கு கமிட்டியும் செய்த அரிய சேவைகளை நான் சர்க்கார் சார்பில் அங்கீகரிக்கின்றேன்.

சேலம் நிலவரி மறுபைசல்

சேலம் ஜில்லாவில் சர்க்கார் கொண்டுள்ள நிலவரி மறுபைசல் முறையைக் கண்டித்து சென்னை சட்டசபையில் ஸ்ரீ. நாச்சியப்ப கவுண்டர் கொண்டு வந்த அவசரத் தீர்மானம் தோல்வியடைந்தது.

அதற்கு சாதகமாக 40 பேர்களும், பாதகமாக 40 பேர்களும் ஓட்டுக் கொடுத்தனர்.

ஆனால், தலைவர் தீர்மானத்திற்கு பாதகமாக தமது ஓட்டைக் கொடுத்ததால் தீர்மானம் தோல்வியடைந்தது.

தற்போதுள்ள வரியைக் கொடுப்பதே விவசாயிகளுக்குக் கஷ்டமாக இருக்கும்போது, அவர்கள் எவ்விதம் அதிக வரியைக் கொடுக்க முடியுமென அங்கத்தினர்கள் கேட்டதற்கு ரெவினியூ மந்திரி கூறிய சமாதானம் மிகவும் வேடிக்கையானதாகும்.

மற்ற ஜில்லாக்களில் நிலவரி மறுபைசல் முறையைக் கைக்கொண்டிருக்கும்போது சேலத்திற்கு மாத்திரம் சலுகை காட்டுவது நேர்மையாகாதென அவர் குறிப்பிட்டார்.

---

### கருங்குழி பார்சல் வழக்கு

சென்னை, பிப்ரவரி, 18—

கருங்குழி பார்சல் கொலை வழக்கில் தூக்கு தண்டனை யடைந்த ராமாநுஜம் பிரிவிகவுன்சிலில் கொடுத்திருக்கும் அப்பீல் மனு தாக்கலாகி யிருப்பதாக சென்னை சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதன்படி இந்த அப்பீல் ஒரு முடிவிற்கு வரும் வரையில் அவரை தூக்கிலிடுவதை நிறுத்தி வைப்பார்கள்.

---

### வீட்டில் பெண் படுகொலை

பட்டப்பகலில் பாதகம்

லட்சுமணபுரி, பிப்ரவரி, 15—

லட்சுமணபுரியில் பட்டப் பகலில் மிக துணிச்சலான கொலை பாதகம் நேற்று மாலை நடந்திருக்கிறது.

நகரில் மிக ஜன நெருக்கமுள்ள சௌக்கின் சமீபத்திலே கண்டோன்மென்ட் காரியாலய ஹெட் கிளார்க்கான ஸ்ரீ. முஷ்டாக் அலிகான் வசித்து வருகிறார்.

அவரது சேவகரின் இளம்பிராயமான மனைவி அவ்வீட்டில் நேற்று மாலை உட்கார்ந்து கொண்டிருக்கையில், திடீரென யாரோ ஒருவன் வீட்டுக்குள் புகுந்து, அப்பெண்ணை நோக்கி துப்பாக்கியால் 4 முறை சுட்டுக் கொன்று விட்டு ஓடி விட்டான்.

கொலை செய்தவன் இன்னும் பிடிபடவில்லை. போலீசார் புலன் விசாரித்து வருகிறார்கள்.